## **In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 70/2022** **Date:23.01.2026.**

**(DW2)-** சிவசுப்பிரமணியன்

**1** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனது அப்பாவும் அய்யா சாமி அப்பாவும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். பட்டிகை சொத்து எனக்கு எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்தில் இருந்து கிடைத்தது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கும் ண 1 ஆம் பிரதிவாதி மற்றும் வாதி அப்பாவிற்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் பட்டிகை சொத்து சர்வே எண்ணில் 5 செண்ட் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 5 செண்ட் சொத்தில் எனது அப்பாவிற்கும் பாதி சொத்தும் 1 ஆம் பிரதிவாதி மற்றும் வாதிக்கு அப்பாவிற்கு பாதி சொத்தும் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு கிழக்க பக்கம் உள்ள 2 ½ செண்ட் சொத்து ஒதுக்கப்ட்டது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு ஒதுக்கப்ட்ட சொத்து அவரது காலத்திற்கு பின்பு கிடைக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி எனக்கு கிடைத்த 2 ½ செண்ட் சொத்தை பொறுத்து நான் எனது மகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் எழுதிக் கொடுத்த 2 ½ செண்ட் சொத்திற்கு மேற்கு பக்கம் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதி சொத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் சேர்த்து 2 ½ சொத்து பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் மேற்படி இருவரும் பாகம் செய்து கொண்டதில் கிழக்கு பக்கம் 1 ¼ செண்ட் வாதிக்கும் மேற்கும் பக்கம் 1 ¼ சொத்து 1 ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்ட்டது என்றால் சரிதான். வாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எல்கை கல் அமைத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. 15.09.2022 ம் தேதி வாதி குறிப்பிட்டுள்ளது போல் நானோ 1 ம் பிரதிவாதியோ வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் எந்தவித எல்கை மாற்றமோ எல்கை கற்களை அகற்றவில்லை என்றால் சரிதான். அதே போல் 10.10.2022 தேதியில் நில அளவர் எல்கை நிர்ணயம் செய்ய வழக்கு பட்டிகை சொத்தை அளவிடு செய்ய வந்ததாகவும் அதை நானும் 1 பிரதிவாதியோ தடுக்கவில்லை என்றால் சரிதான். 12.10.2022 தேதியில் வாதி இரணியல் காவல் நிலையத்தில் என்மீதும் 1 பிரதிவாதி மீதும் புகார் கொடுத்த விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும் புகார் கொடுத்திருந்தார். மேற்படி புகார் யார் மீது கொடுக்கப்பட்டது என்றால் என் மீது மட்டும் கொடுக்கப்பட்டது.

4. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மேற்கு பக்கம் உள்ள 1 ¼ செண்ட் சொத்தை அவர் அனுபவிப்பதில் எனக்கு எந்த ஆட்சியபணை இல்லை என்றால் சரிதான். என் சொத்திற்கும் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும் எல்கை கற்கள் இல்லை என்றால் சரிதான்.

__வாதி தரப்பு குறுக்கு விசாரணை__

1. இந்த வழக்கின் 2 ஆம் பிரதிவாதி சொத்து குறித்து எந்த ஆவணமும் நான் தக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதிக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2 ஆம் பிரதிவாதி சொத்துக்கு கிழக்கு பக்கம் யாருடைய சொத்து என்றால் நான் கிரையம் பெற்ற சொத்து உள்ளது. நான் கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண் என்ன என்றால் நினைவில்லை. 2 ஆம் பிரதிவாதி சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்றால் 1803 ஆகும். மேற்படி பழைய சர்வே எண் 1803 க்கு மொத்த விஷ்திரணம் என்ன என்றால் 5 செண்ட் ஆகும்.

2. வழக்கு சொத்தை பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிகிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் என்ன வேலை செய்கிறார் என்றால் கோயம்முத்துரில் கார் கம்பெனியில் வேலை செய்கிறார். தற்போதும் கோயம்துரில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது மகள் இந்த வழக்கை நான் நடத்துவதற்கு எனக்கு எந்தவித அதிகாரமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மகள் சாட்சியம் அளிக்க வந்தால் வழக்கு குறித்த உண்மை நிலவரம் வெளிப்பட்டுவிடும் என்பதால் அவர் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரியல்ல அவருக்கு சொத்து குறித்து எந்த விபரமும் தெரியாது.

3. இந்நீதிமன்றத்தில் எனது மகளான 2 ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு எந்த சொத்திற்கு தாக்கல் செய்ப்பட்டுள்ளது என்ற விபரத்தை நான் இந்த நீதிமன்றத்தில் நிறுவிக்கும் பொருட்டு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் என்ன பரிகாரம் கேட்கபட்டுள்ளது என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டு இருந்தது.

4. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த முந்தைய வழக்கான OS.No. 231/2011 என்ற வழக்கில் இந்த வழக்கின் தபசில் சொத்து சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழ்க்கில் 2 ம் பிரதிவாதியின் சொத்தை பொறுத்துதான் பரிகாரம் கோரப்பட்டது என்றால் சரிதான். பத்மானபாபுரம் சார்பு நீதிமன்றத்தில் வாதி அசல் வழக்கு எண் 217/2011 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இந்த வழக்கின் தபசில் சொத்தை சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் சொத்திற்கு கிழக்கு பக்கம் 2 ம் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு வடக்கு பக்கம் சாலை செல்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. 2 ம் பிரதிவாதியின் சொத்து ஆதியில் எனது அப்பாவிற்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். வாதியின் அப்பாபும் எனது அப்பாவும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். வாதியின் அப்பாவிற்கு பி பட்டிகை சொத்தும் எனது அப்பாவிற்கு டி பட்டிகை சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் மொத்த 5 செண்ட் சொத்தில் தலா 2 ½ செண்ட் சொத்து பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். வாதிக்குப் பத்தியாப்பட்ட சொத்தை பொறுத்து வாதி எடுபதில் எந்த ஆட்சியபணையும் இல்லை என்றால் சரிதான் எந்த ஆட்சியபணையும் இல்லை. வாதியின் அம்மா எழுதிய உயில் தபசி சொத்தை பொறுத்து தான் தவிர 2ம் பிரதிவாதி சொத்தை பொறுத்து எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

6. வாதிக்கு உரிமைப்பட்ட சொத்தை அளந்து எடுப்பதில் எனக்கு எந்த ஆட்சியபணையும் இல்லை என்றால் சரிதான் நான் எனது சொத்தில் அளந்து வேலி அமைத்துள்ளேன். நான் குறிப்பிடுவது போல் எந்தவேலியும் இல்லை என்றாலும் எனக்கு வழக்கு சொத்தை பொறுத்து எந்த விபரமும் தெரியாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிகிறேன் என்றாலும் சரியல்ல. நான் வேலி இருப்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த வழக்கு இந்த வழக்கை பாதிக்காது என்றால் சரியல்ல. அந்த வழக்கின் தன்மையும் இந்த வழக்கின் தன்மையும், வழக்கு மூலமும் வெவ்வேறானது என்றால் சரியல்ல.

7. 10.10.2022 தேதியில் இந்த வாதி தனியார் நிலஅளவர் மூலம் அவரது சொத்தை அளக்க முயற்சி செய்ததை பிரதிவாதிகள் தடுத்து விட்டனர் என்றாலும் ஆதனால் வாதியால் அவரது சொத்தின் எல்கையை நிர்ணயம் செய்ய முடியவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் 15.09.2022 தேதியில் வாதியின் சொத்தில் உள்ள எல்கை கற்களை அகற்றிவிட்டார்கள் என்றாலும் அதனால்தான் 2 ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்க வரவில்லை என்றாலும் சரியல்ல. 12.10.2022 ல் தபசில் சொத்தை அளவீடு செய்ய விடததால் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் மேற்படி புகாரின் விசாரணையில் நீதிமன்றம் மூலம் தீர்வுகாண வேண்டி அளிவுறுதியதின் அடிப்படையில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி அவரது சொத்தை அளந்து எல்கை நிர்ணயிப்பதில் எனக்கு எந்தவித இழப்பும் எற்பாடாது என்றால் சரிதான். எனவே வாதியின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கபடவேண்டும் என்றால் சரியல்ல.